# *புதுச்சேரி அரசு*
# *துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **22 ஜூன், 2022**

## பத்திரிகை செய்தி

இந்தியச் சுதந்திரத்தின் 75-வது ஆண்டு கொண்டாட்டங்களை ஒட்டி புதுச்சேரி பாரதி வீதி மற்றும் நேரு வீதியில் நடைபெற்ற சிறப்பு தூய்மைப் பணியில் துணைநிலை ஆளுநர் கலந்து கொண்டார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிதாவது,

- புதுச்சேரியை அனைவரும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். நேற்று முதல் 75 இடங்களில் சிறப்பு தூய்மைப் பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது அரசு மட்டுமே செய்யக்கூடிய பணி அல்ல. பொதுமக்கள் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். நேற்று கடற்கரையை சுத்தம் செய்த போது ஐஸ்கிரீம் கப்கள் சிதறிக் கிடந்தன. சாப்பிட்ட மீதத்தை அல்லது குப்பைகளை குப்பைத் தொட்டியில் சேர்க்க வேண்டியது அவசியம். பாரதப் பிரதமர் தூய்மை இந்தியா திட்டத்தை முன்னெடுத்துச் சென்று கொண்டிருக்கிறார். அதில் நாம் பங்களிப்பு செய்ய வேண்டும்.
- கொரோனா இந்தியா முழுவதும் மீண்டும் அதிகரித்து வருகிறது. அதனால் பொதுமக்கள் அனைவரும் கொரோனா தடுப்பு வழிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டும். இன்று மாலை துணைநிலை ஆளுநர் மாளிகையில் கொரோனா மேலாண்மை கூட்டம் நடைபெற இருக்கிறது. புதுச்சேரியில் இதுவரை 30 பேர் பாதிக்கப்படுகிறார்கள். தடுப்பூசி போட்டுக் கொள்ளாதவர்கள் தடுப்பூசியைப் போட்டுக்கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கு செலுத்த வேண்டிய தடுப்பு ஊசியையும் செலுத்த வேண்டும். அனைவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். கூட்டமாக இருக்கும் இடங்களில் முகக்கவசம் அணிவது, கைகளைக் கழுவுவது போன்ற நடைமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக இருக்க வேண்டும்.
- தற்போது அங்காடி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அப்போது கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அனைத்தும் செய்யப்படும். அதன் பிறகு சாலையில் வைத்து வியாபாரம் செய்வது தடுக்கப்படும். மற்ற கோரிக்கைகள் வரும்போது, அவற்றை பரிசீலனை செய்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- காவிரி நதிநீர் பங்கீட்டில் புதுச்சேரிக்கு கிடைக்கவேண்டிய பங்கு கிடைக்க வேண்டும் என்பதே நம்முடைய நிலைப்பாடு. காவிரி வழிகாட்டு குழுவிடமும் இந்த கருத்தை வலியுறுத்தி கடிதம் கொடுத்திருக்கிறோம். மேகதாது அணை கட்டக்கூடாது என்பதை தெளிவாகவே அரசு குறிப்பிட்டிருக்கிறது.
- அக்னிபாத் குறித்து தரைப்படை, விமானப்படை, கப்பல்படை என்று மூன்று ராணுவப் பிரிவு தலைமை அதிகாரிகளும் பேட்டி கொடுத்திருந்தார்கள். இப்போது இந்த நாட்டிற்காக இந்த இளைஞர் படை தேவையாக இருக்கிறது. இந்த நாட்டின் பாதுகாப்புத் தேவை கருதி ஓர் ஆண்டு காலமாக இது திட்டமிடப்பட்டது. எந்த விதத்திலும் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள். இன்று இந்த நாட்டிற்கு எப்படி ராணுவப்படை வீரர்கள் தேவையோ அப்படி அக்னி படைவீரர்களும் தேவை என்ற கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். இதை அரசியல் ஆக்குவதை விட இந்த நாட்டின் பாதுகாப்பு கருதி அரசு ஒரு முடிவை எடுத்திருக்கிறது என்ற எண்ணத்தோடு இதை அணுக வேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

- ஆளுநர் மாளிகை, அனைவரும் அனுகக்கூடிய மாளிகையாகத்தான் இருக்கிறது. யாரும் அணுக முடியாத அளவிற்கான பாதுகாப்பை நான் நடைமுறைப்படுத்தவில்லை என்பழைத தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. லட்சுமிநாராயணன், உள்ளாட்சி மற்றும் நகராட்சி அதிகாரிகள் உடனிருந்தனர்.